**2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

**அ.வ.எண். 321/2023**

**14.03.2024 வா.சா.2. திரு. இசக்கிபாண்டி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரண**

1. எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்ற அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. பார்வதி அழைத்ததால் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு முப்பிடாதி ரமேஷ் என்ற 2 பிள்ளைகள். அவர்களில் ஒருவர் ஓட்டுநராகவும், மற்றொருவர் மிட்டாய் கடை மாஸ்டராகவும் பணிபுரிகிறார்கள். என் மகன் ரமேஷ் என்பவருக்கு எதிராக சுத்தமல்லி காவல் நிலையத்தில் குற்ற வழக்கு எண்.306/2022 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். செல்லப்பா என்பவர் அளித்த புகாரின் அடிப்படையில் அந்த வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என் மகனும் மற்றும் 4 நபர்களும் மேற்படி செல்லப்பாவை அடித்ததாக வழக்கு என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி மணி என்பவர் அளித்த புகாரின் பேரில் என் மனைவி இசக்கியம்மாள், மகன் ராமன்(எ) ரமேஷ் , என் மனைவியின் சகோதரர் ஐய்யக்குட்டி ஆகியோர்களுக்கு எதிராக சுத்தமல்லி காவல் நிலையத்தில் குற்ற வழக்கு 126/2023 பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என் மகன் ராமன் (எ) ரமேஷ்க்கு மற்றும் அவரது நண்பர்கள் 2 பேர்களுக்கு எதிராக கல்லூரில் ஆடு திருடி விட்டதாக சுத்தமல்லி காவல் நிலையத்தில் குற்ற வழக்கு எண் 150/2023 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என் மகன் முப்பிடாதிக்கு எதிராக ஆரழ்வாய்மொழியில் குற்ற வழக்கு எண்.468/2021 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என் மகன் வேலைப்பார்த்த நிறுவனத்தின் உரிமையாளரை கொலை முயற்சி செய்ததாக அந்த வழக்கு பதியப்பட்டது என்றால் சரிதான். அதனால் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் நீதிமன்றத்தில் பொய் சாட்சி அளிப்பதும் நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்கு எடுப்பதும் வாடிக்கையானது என்றால் சரியல்ல, எனக்கு எதிராக எந்த வழக்கும் இல்லை.

2. பார்வதி எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வழி பாதை தொடர்பாக. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் நீளம் அகலம் தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்கு பக்க எல்கைகளை குறிப்பிட்டு சொல்லத்தெரியாது என்றால் சரிதான். பார்வதி வீட்டிற்கு தெற்கு நோக்கி சின்னதம்பி வீடு உள்ளது என்றால் சரிதான். அதில் ஒரு வழிபாதை உள்ளது என்றால் இல்லை. அதில் ஒரு வழிபாதை உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பார்வதியின் கிரைய ஆவணத்தை நான்

பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அதில் வழி பாதை தொடர்பாக என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தின் மேற்கு பக்கம் கந்தசாமிக்கு இடம் உள்ளது என்றால் சரிதான். அதில் ஒரு வழி பாதை உள்ளது என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அங்கு ஒரு வழி பாதை உள்ளது என்றால் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3. பார்வதி தாவா சொத்தை காலி மனையாக கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அவர் கட்டுமான பொருட்களை சின்னதம்பி வீட்டு வழியாக கொண்டு வந்தார் என்றால் இல்லை, இந்த பொது நடைபாதை வழியாகத்தான் கொண்டு வந்தார். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொது நடைபாதை தொடர்பாக குட்டித்துரை என்பவர் பொன்பாண்டி, சுதா, ஐய்யக்குட்டி மற்றும் வாதிக்கு எதிராக சுத்தமல்லி காவல் நிலையத்தில் ஒரு புகார் அளித்திரந்தார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட 4 பேர்களும் முள் வேலியை சேதப்படுத்தியதாக குறிப்பிட்டு புகார் கொடுத்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு இந்த விவரங்கள் அனைத்தம் தெரியும் என்றாலும் நான் வேண்டுமென்றே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குட்டித்துரை அவரது இடத்தை சுற்றி வேலி போட்டு அனுபவம் செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியவில்லை. நான் சங்கன்திரடில் வசிக்கிறேன். தாவா சொத்து சம்பந்தமாக நான் முன்னுக்கு பின் முரணாக வேண்டடுமென்றே உண்மைகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4, வாதி எப்போது வீடு கட்டினார் என்ற விவரம் எனக்கு தெரியும். தாவா சொத்தில் 2 மின் கம்பங்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளது என நான் கூறும் மின் கம்பத்திலிருந்து தான் பிரதிவாதி வீட்டிற்கும் மின் இணைப்பு செல்கிறது என்றால் அவர்கள் வீட்டிற்கு மின் இணைப்பு அந்த கம்பத்திலிருந்து செல்லவில்லை. புதிதாக மின் இணைப்பு பெறும்போது மின் பாதை எளிதாக செல்லக்கூடிய வழியாகத்தான் மின் கம்பங்கள் நடப்படும் என்றால் சரிதான். அதே போல் தான் ஒரு வீட்டிற்கு இணைப்பு கொடுக்கும்போது எந்த வழி அருகில் உள்ளதோ அந்த வழியாகத்தான் குடி நீர் இணைப்பு வழங்கப்படும் என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்கு மூலத்திற்கு தகவல் சொன்னது யார் என்றால் பார்வதி தான் சொன்னார். நான் அவருடன் சென்று கையெழுத்து மட்டும் செய்துக்கொடுத்தேன் என்றால் சரிதான்.